சுருக்கம்

பல்கலைக் கழகங்கள் - அனைத்துப் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு பொதுவான ஊதியம் மற்றும் ஒரே சீரான பணியிடங்கள் நிலவுவதற்காக அமைக்கப்பட்ட முனைவர் எஸ்.முத்துக்குமரன் குழுவின் பரிந்துரை மீது ஆணைகள் வெளியிடப் படுகின்றன.

---

**உயர்கல்வி (எச்2) துறை**

அரசாணை (நிலை) எண்.402
நாள்: 13.12.2006

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (2டி) எண்.2, உயர்கல்வித்துறை நாள் 5.2.1997
2) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் செயலரின் நே.மு.க.எண்.137/97அ, நாள் 26.8.1997, 27.2.1998 மற்றும் 6.8.1998.
3) அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதிதாசன்பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக பதிவாளர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள்.

-----

ஆணை:

அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு ஒரே சீரான பொது ஊதிய விகிதத்தை நிர்ணயிக்க வேண்டியும், அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் ஒரே சீரான பணியிடங்கள் நிலவ வேண்டியும் ஆய்வு செய்ய தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் செயலர் முனைவர் எஸ்.முத்துக்குமரன் அவர்கள் தலைமையில் குழு அமைத்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. இக்குழு கீழ்க்கண்ட பொருள்பற்றி பரிசீலனை செய்தது:-

அ) அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியரல்லா பணியிடங்கள் அமைப்பு, ஒரே சீரான வரையறுக்கப்பட்ட பணியிடங்களாக அமைய பரிசீலிக்கப்படுதல். தேவைப்படுமானால், இணைப்புகள் கொண்ட பல்கலைக்கழகங்கள் (Affiliated Universities) ஒருமைப் பல்கலைக் கழகங்கள் (Unitary

Universities) மற்றும் நிகர்நிலை பல்கலைக் கழகங்களுக்கு (Deemed Universities) தனிப்பட்ட பணியிடங்கள் அமைப்பது பற்றியும் பரிசீலிக்கப்படுதல்.

ஆ) ஒரே விதமான பணி மற்றும் ஒரே கல்வித் தகுதி போன்றவைகளை கொண்ட அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு ஒரே சீரான பொது ஊதியத்தொகை வழங்க ஆலோசிக்கப்படுதல்.

இ) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு அமைக்கப்பட்ட அலுவலக மற்றும் நிர்வாக (Office and Management) குழுவின் பரிந்துரையை செயல்படுத்த தற்போதுள்ள பல்கலைக் கழகங்களின் விதிகளை திருத்தம் செய்ய வேண்டுமா என்பதை சரிபார்த்து அக்குழுவின் எந்த பரிந்துரையின்படி விதிகளில் திருத்தம் தேவைப்படுவது என்பது பற்றி ஆராய்தல்.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில் குழுவின் பரிந்துரைகளை மூன்று பகுதிகளாக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் செயலர் அரசுக்கு அனுப்பி உள்ளார். அக்குழு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மீதான அலுவலக மற்றும் நிர்வாக குழு அறிக்கையின்படி அனைத்துப் பல்கலைக் கழக விதிமுறைகளை திருத்த வேண்டியதில்லை என்றும், பல்கலைக்கழக ஆசிரியரல்லா பணியாளர்களான இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களின் ஊதிய விகிதத்தை தலைமைச் செயலகத்தில் உள்ள உதவியாளர், உதவிப் பிரிவு அலுவலர் மற்றும் பிரிவு அலுவலர் ஆகியோருக்கு இணையான ஊதியமாக மாற்றியமைத்து வழங்க வேண்டுமென்றும், பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் மற்றும் துணைப் பதிவாளருக்கு (பழைய ஊதிய விகிதப்படி) ரூ.2500-4200 மற்றும் 3700-5000 என்றும், மேலும் முதுநிலை / தலைமை கண்காணிப்பாளர்கள் மற்றும் முதுநிலை / துணைப் பதிவாளர் போன்ற பதவிகளை நீக்கி அப்பதவிகளில் தேர்வுநிலை (Selection Grade) மற்றும் சிறப்பு நிலை (Special Grade) பதவிகள் ஏற்படுத்தவும் அனைத்து பணியாளர்களின் ஊதியம் தமிழ்நாடு அரசு 5வது ஊதியக் குழுவின் பரிந்துரை கோட்பாட்டுக்குள் அமைந்து இருத்தல் வேண்டுமெனவும் பரிந்துரை செய்தது.

4. முனைவர் எஸ்.முத்துக்குமரன் தலைமையிலான குழு அளித்த பரிந்துரையை அரசு பரிசீலனை செய்தது. விரிவான பரிசீலனைக்குப் பின், குழுவின் பரிந்துரையை கீழ்க்கண்டவாறு செயல்படுத்தலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது:-

i) பல்கலைக்கழகங்களில் ஆசிரியரல்லா பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க குறியீடு (Norms) மாணவர் எண்ணிக்கை, ஆசிரிய பணியாளர்கள் மற்றும் துறைகளின் எண்ணிக்கை அடிப்படையில் அமைய வேண்டும் என்ற குழுவின் கருத்தை ஏற்க இயலாது. ஏனென்றால், அக்காரண கூறுகள் அவ்வப்போது மாறுபடும், மாணவர் எண்ணிக்கையும், துறையின் எண்ணிக்கையும் ஒவ்வொரு நேரமும் மாறுபடுகிறது. மாணவர் எண்ணிக்கை குறையும் பட்சத்தில் பணியாளர்கள் பொதுவாக வேலை நீக்கம் செய்யப்படுவதில்லை. எனவே, அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தற்போதுள்ள

ஆசிரியரல்லா பணியிடங்கள் உறைந்த நிலையில் (Frozen) வைத்து இனி இத்தகைய ஆசிரியரல்லா பணியிடங்களை அரசாணை இல்லாமல் எந்த ஒரு பல்கலைக்கழகத்திலும் புதிய நியமனம் செய்யாதிருத்தல் வேண்டும். எனவே, பல்கலைக் கழகங்களிடமிருந்து பணியிடங்கள் தோற்றுவிக்கும் கருத்துருக்கள் அரசால் ஒரே சீரான முறையில் செயல்வடிவு செய்வதாக அமையும்.

ii) அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு பலவிதமான ஊதிய விகிதங்களும் மற்றும் பல விதமான ஆசிரியரல்லா பணியிடங்களும் நிலவுகின்றன. அவர்களுக்கு ஒரே சீரான பொதுவான ஊதிய விகிதம் வழங்குவதற்கு ஏதுவாக கீழ்க்கண்ட ஆசிரியரல்லா பணியிடங்கள் மட்டும் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பின்பற்றப்பட வேண்டும் :-

1. தட்டச்சர்கள்
2. இளநிலை உதவியாளர்கள்
3. உதவியாளர்கள்
4. கண்காணிப்பாளர்கள்
5. உதவிப்பதிவாளர் / கட்டுப்பாட்டாளர்
6. துணைப் பதிவாளர் / கட்டுப்பாட்டாளர்.

iii) அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கண்காணிப்பாளர் வரையுள்ள அனைத்து ஆசிரியரல்லா பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் தமிழக அரசு துறைகளில் உள்ள இணையான ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கு சமமாக அமைந்திருக்க வேண்டும். உதவிப் பதிவாளர்களின் பழைய ஊதிய விகிதப்படி ரூ.2500-4200 (தற்போது 1.1.96 முதல் ரூ.8000-275-13500) என்றும் துணைப் பதிவாளர்களுக்கு பழைய ஊதிய விகிதப்படி ரூ.3000-4500 (தற்போது 1.1.96 முதல் ரூ.10000-325-15200) என்றும் வழங்கலாம்.

iv) பல்கலைக்கழக ஆசிரியரல்லா பணியாளர் எவராவது தற்போது மேற்கண்ட இனம் iii-ல் கண்ட ஊதிய விகிதம் அல்லாமல் வேறுபட்ட ஊதிய விகிதத்தை தற்போது பெற்றுவந்தால், அவர்கள் மேலே இனம் iii-ல் கண்ட ஊதிய விகிதத்தில் வைக்கப்பட்டு அவர்களுடைய ஊதிய வித்தியாச பணத்தை அவர்களுக்கு தனி ஊதியமாக (Personal Pay) கொடுக்கப்பட்டு, அதே அடிப்படையில் ஊதியத்தை அவர்களுக்கு ஓய்வுபெறும் வரையோ அல்லது அடுத்த பதவி உயர்வு வரையோ வழங்குதல் வேண்டும்.

v) அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு கீழ் உள்ள ஆசிரியரல்லா பணியிடங்கள் அரசு துறையில் இல்லாத பணியிடங்களாக இருந்தால், அப்பணியிடங்கள் யாவும் உடனடியாக நீக்கப்படவேண்டும். அப்பதவிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசு துறைகளில் உள்ள பணியிடங்களுக்கு இணையாக உள்ள பல்கலைக்கழக ஆசிரியரல்லா பணியிடங்களில் பணி அமர்த்தப்படவேண்டும். அவர்களுடைய ஊதிய வித்தியாசத்தை தனி ஊதியமாக வைத்து அவர்களின் பதவி உயரும் வரையோ அல்லது ஓய்வு பெறும் வரையோ அதே அடிப்படையில் உள்ள ஊதியம் வழங்குதல் வேண்டும்.

vi) பதிவேடு எழுத்தர் நிலைக்கு கீழ் உள்ள காவலர், தோட்டக்காரர், பெருக்குபவர் போன்றவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு

வழங்கப்படும் ஊதிய விகிதத்தை வழங்குதல் வேண்டும். மேற்கண்ட பணியிடங்களை எதிர்காலத்தில் நிரப்புவது நிறுத்தப்பட்டு, அப்பணிகள் எதிர்காலத்தில் தனியார் துறை மூலம் ஒப்பந்த முறையில் செய்யப்பட வேண்டும்.

vii) தற்போது தட்டச்சர் பதவி உள்ள பல்கலைக்கழகங்களில் அப்பதவியில் உள்ளவர்கள் ஓய்வு பெறும் வரை அனுமதிக்கலாம். இப்பதவியில் உள்ளவர்கள் ஓய்வு பெற்ற பின்னர், இந்த தட்டச்சர் பணியிடம் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் என மாற்றப்படும். மேலும் அலுவலக நடைமுறையை மேன்மைபடுத்த வேண்டி கணிப்பொறி மயமாக்க உடனே செயல்பட வேண்டும்.

viii) பெருவாரியான பல்கலைக் கழகங்களில், தற்போதுள்ள முதுநிலை / நிகர்நிலை கண்காணிப்பாளர், முதுநிலை உதவியாளர்கள் போன்ற ஆசிரியரல்லா பணியாளர்கள் நிரப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அரசு துறைகளில் உள்ளது போல் ஒரே பதவியில் 10 ஆண்டுகள் பணிபுரிந்த பின்பு தேர்வு நிலை (Selection Grade) பணியிடம் மற்றும், 20 ஆண்டுகள் பணிபுரிந்த பின்பு சிறப்பு நிலை (Special Grade) என்று மாற்றப்படவேண்டும்.

5. மேலே பத்தி 4ல் உள்ள ஆணையை செயல்படுத்தும் போது கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாதவாறு பல்கலைக்கழகங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு கூடுதல் செலவினம் ஏற்பட்டாலும், அதனை அரசு வழங்கும் மானியத் தொகையில் குறைத்தே அரசு வழங்கும். இதனை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதனை உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதனையும் மீறி கூடுதல் செலவினம் ஏற்பட்டால், அதனை அந்தந்த பல்கலைக் கழகங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 78355/கல்வி ஐ /2006, நாள் 12.12.2006 ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்:

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சென்னை-5
அனைத்துப் பல்கலைக்கழக பதிவாளர்கள்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25
உள்ளாட்சி நிதிக்கணக்கு இயக்குநர், குறளகம், சென்னை
செயலாளர், பல்கலைக் கழக நிதிநல்கைக் குழு, புதுடெல்லி
மாநில கணக்காயர், சென்னை 18/35
சம்பளக் கணக்குஅலுவலர், சென்னை-5/9/35/79
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
அனைத்து மாவட்ட கருவூலக்கணக்கு அலுவலர்கள்.

நகல்

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
உயர்கல்வித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9
தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, சென்னை-9
சட்டத்துறை, சென்னை-9
சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, சென்னை-9
கால்நடைபராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை-9
வேளாண்மைத்துறை, சென்னை-9
உயர்கல்வித் (இ/எப்/ஜி/கே/ஐ) துறை, சென்னை-9
நிதித்துறை (கல்வி-I) சென்னை-9
இகோ/உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்